**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-060420224822

Volume: 6

Issue: 4

Month: April

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 19.02.2022

Accepted: 25.03.2022

Published: 01.04.2022

Citation:
Rejithkumar, D. "Ancient Tamil Community Showing Paan Aatruppadai Literature." *Shanlax International Journal of Tamil Research,* vol. 6, no. 4, 2022, pp. 41–52.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i4.4822

*Corresponding Author:
rejithd79@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Ancient Tamil Community Showing Paan Aatruppadai Literature

**Dr. D. Rejithkumar**
*Guest Lecturer, Tamil Department*
*Government Arts and Science College, Vedaranyam, Tamil Nadu, India*
*https://orcid.org/0000-0002-3879-6708*

**Abstract -** Sangam literature is a medium for expressing the life of the Sangam people. The people who lived in the Sangam era lived in poverty and luxury. This article is aimed at highlighting the Tamil community as expressed in the literature of the Paan Aatruppadai, the Sirupaanaatruppadai and the Perumpaanaatruppadai. This illustrates the importance and significance of the Paan Aatruppadai literature.The way of life of the Sangakkala people such as family, food, dress, costumes and accommodation are also explored. The occupations of the ancients such as plowing, music, wood industry, iron industry, pottery industry, salt trade and the economic status of the people are discussed. News on the biographies of artists, the majesty of the emperor, the customs of the people, and religion are explored. The social status of the Palanthamil shown by the Paann Aatruppadai has been extensively explored.

**Key Words:** Sangam Literature, Sirupannarupadai, Perumpannarupadai Aatruppadai, Family, Dwelling System, Plowing, Music Industry, Wood Industry, Iron Industry, Pottery Industry, Salt Trade, Economic Status, Biography of Artists, Majesty of Emperor, Religion.

**References**

1. Bhagwati. 1980. *Tamilar Aadaikal*, Ulaga tamizhlarachi Niruvanam, Tharamani.
2. Chidambaranar. 2009. Sami. Ettuthokai Tamizhlar Panpaadu, Arivu Pathippagam, Chennai.
3. Goets, W. (Ed). 1986. The New Encyclopaedia Britanica, Vol. IV, University of Chicago, London.
4. Rasamanikkanar, 1970. Ma., Pathupattu Arachi, Chennai, University of Chennai.
5. Rejithkumar, D., 2009. Marabu vali Tholilkal , Kaavya Publishing, Chennai.
6. Sasivalli, V.C, 1989. Pandaiya Tamizhlar Tholilkal, Ulaga tamizhlarachi Niruvanam, Chennai.
7. Shanmugam Pillai. M. 2004. Sangath Tamilar Valviyal, Ulaga tamizhlarachi Niruvanam, Tharamani, Chennai.
8. Subramanian. S.W. 2009. Sanga Ilakkiyam pathupattu, sirupaanarruppadai Thelivurai, Meiyappan Pathippagam sithamparam.
9. Thurston, Edgar, 1987. South Indian castes and tribes, Volume 2, University of Tamil Nadu, Thanjavur.

# பாண் ஆற்றுப்படை இலக்கியங்கள் காட்டும் பண்டையத் தமிழ்ச் சமூகம்

*முனைவர் த. ரெஜித்குமார்*
கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, வேதாரண்யம்

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்ககால மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் ஊடகமாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. சங்ககாலத்தில் வாழ்ந்த மக்கள் வறுமையிலும் மகிழ்ச்சியாக வாழ்ந்துள்ளனர். இக்கட்டுரையானது பாண் ஆற்றுப்படைகளான சிறுபாணாற்றுபடை, பெரும்பாணாற்றுப்படை காட்டுகின்ற தமிழ்ச் சமூகத்தை எடுத்துரைப்பதாக அமைகிறது. ஆற்றுப்படை இலக்கியத்தில் பாண் ஆற்றுப்படையின் சிறப்பு குறித்து எடுத்துரைக்கப்பட்டுள்ளது. சங்ககால மக்களின் வாழ்வியல் முறைகளான குடும்பம், உணவு, உடை, அணிகலன்கள், உறைவிடங்களின் அமைப்பு குறித்தும் ஆராயப்பட்டுள்ளது. பழந்தமிழர்கள் செய்த்தொழில்களான உழவுத் தொழில், இசைத் தொழில், மரத் தொழில், இரும்புத் தொழில், மண்பாண்டத் தொழில், உப்பு வணிகம், மக்களின் பெருளாதார நிலை ஆகியவை குறித்து ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது. கலைஞர்களின் வாழ்வியல், மன்னனின் மாட்சிமை, மக்களின் பழக்கவழக்கங்கள், சமயம் குறித்த செய்திகள் ஆராயப்பட்டுள்ளன. பாண் ஆற்றுப்படைகள் காட்டுகின்ற பழந்தமிழரின் சமூகநிலை விரிவாக ஆய்ந்துரைக்கப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பாண் ஆற்றுப்படை, குடும்பம், உறைவிடங்களின் அமைப்பு, உழவுத் தொழில், இசைத் தொழில், மரத்தொழில், இரும்புத் தொழில், மண்பாண்டத் தொழில், உப்பு வணிகம், பெருளாதார நிலை, கலைஞர்களின் வாழ்வியல், மன்னனின் மாட்சிமை, சமயம்.*

## முன்னுரை

சங்ககால இலக்கியங்கள் எட்டுத் தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். இதனைப் பாட்டும், தொகையும் என்று கூறும் மரபும் உள்ளது. பாட்டு என்றால் பத்துப்பாட்டைக் குறிக்கும். திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாணற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக் காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைப்படுகடாம் என்ற பத்து பாடல்களின் தொகுப்பாக விளங்குவதால் பத்துப் பாட்டு என்று அழைக்கப்படுகிறது. இதில் ஐந்து ஆற்றுப்படை நூல்கள் காணப்படுகின்றன. இக்க ட்டுரையானது பாண் ஆற்றுப் படைகளான சிறுபாண், பெரும்பாண் ஆற்றுப்படைகள் காட்டும் பண்டையத் தமிழ்ச் சமுதாய நிலை குறித்து ஆய்வதாக அமைகிறது.

## ஆற்றுப்படை

ஆற்றுப்படை என்பது வழிப்படுத்துதல், வழியில் செலுத்துவது என்று பொருள்படும். இது சங்ககால இலக்கிய வகைமைகளுள் ஒன்றாக விளங்குகிறது. தொல்காப்பியர் இதற்கு இலக்கணம் கூறியுள்ளார். இதனை,

> **கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**
> **ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்**
> **பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீ இக்**
> **சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்**
> **(தொல்காப்பியம். பொருள். புறத் திணை. *30*)**

என்ற நூற்பா மூலம் அறிய முடிகின்றது. சங்ககாலத்தில் பழுத்த மரம் தேடிச் செல்லும் பறவைகள் போல், பரிசில் பெறுவோர் (இரவலர்) பரிசில் கொடுப்போரை (புரவலர்) நாடி, தேடிச் சென்றனர். பரிசில்களைப் பெற்று வருகின்ற கூத்தர். பாணர். விறலி, பொருநர் ஆகியோர் பரிசில் பெறச் செல்லுகின்ற கூத்தர் பாணர், விறலி, பொருநர் ஆகியோரை வரும் வழியில் பார்த்து தாங்கள் பெற்று வந்தச் செல்வத்தை நீங்களும் பெறுவீர்கள் என்று குறிப்பிட்ட புரவலரிடம் செல்லுமாறு ஆற்றுப்படுத்து வதாக அமைகின்றது.

### பாண் ஆற்றுப்படைகள்

பத்துப்பாட்டில் இரண்டு பாணாற்றுப் படைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று சிறுபாணாற்றுப்படை, மற்றொன்று பெரும்பாண் ஆற்றுப்படை என்பனவாகும். இதில் அளவில் சிறியதும், குறைந்த அடிகளைக் கொண்டதுமானவை சிறுபாண் ஆற்றுப்படை என்றும், அளவில் பெரியதும் அதிகமான பாடல்களைக் கொண்டது மானவை பெரும்பாண் ஆற்றுப்படை என்றும் பெயர் பெற்றன. சிறிய யாழை வாசிப்போர் சிறுபாணர் என்றும், பெரிய யாழை வாசிப்போர் பெரும்பாணர் என்றும் அழைக்கப்பட்டனர். சிறுபாணனை ஆற்றுப்படுத்துவது சிறு பாண் ஆற்றுப்படை என்றும் பெரிய பாணனை ஆற்றுப்படுத்துவது பெரும்பாண்ணாற்றுப் படை என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சங்ககாலத்தில் பண் இசைத்து பாடல்களைப் பாடுகின்ற பாணர்களை இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் என்று மூன்றாக வகைப்படுத்துவர். இதில் இசையுடன் பாடுவோரை இசைப்பாணர் என்றும், யாழினை இசைப்போரை யாழ்ப்பாணர் என்றும், பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்துபவரை மண்டைப்பாணர் என்றும் அழைப்பர். இவர்கள் தமக்குப் பரிசளிப்பவரைப் புகழ்ந்து பாடியும் நடனம், பலவகையான வாத்தியங்களை இசைத்தல் போன்ற கலைகளில் கைத் தேர்ந்தவர்கள் ஆவார். இவர்கள் அரசர்கள், சிற்றரசர்கள், நிலத்தலைவர்களின் குடும்ப நண்பர்கள். கணவனுக்கும் மனைவிக்கும் ஊடல் உண்டான சமயங்களில் அவர்களுக்கிடையில் தூதுவர்களாய் நின்று சமாதானம் செய்து வைப்பார்கள் (2009: 59) என்று சாமி சிதம்பரனார் குறிப்பிடுகிறார்.

சிறுபாண் ஆற்றுப்படையினை இயற்றியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் ஆவார். இவர் நல்லூர் என்ற ஊரில் பிறந்தவர். இவரைக் குறித்து இராச மாணிக்கனார் கூறும்போது, சிறிய யாழை உடைய பாணர் பாடிய ஆசிரியர் நத்தத்தனார் சென்னைக்குத் தென்மெற்கிலுள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகம் வட்டத்தில் உப்பங்கழிக்கும் கடற்கரைக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி இப்போது எடக்க நாடு என்று மருவி வழங்கப் பெறுகிறது. அந்நாட்டின் தென்பகுதியில் நல்லூர் என்னும் சிற்றூர் உள்ளது. நத்தத்தனார் என்னும் புலவர் அந்த ஊரில் இருந்தார் என்பது செவிவழிச் செய்தி (1970 : 55) என்பார்.

பெரும்பாணாற்றுப்படையின் ஆசிரியர் கடியலூர் உருத்திரக் கண்ணனார் என்பவராவார். இவருடைய இயற்பெயர் கண்ணனார் என்பதாகும். இவர் தந்தையின் பெயர் உருத்திரன் அல்லது உருத்திரனார் என்பதாகும். இவர் கடியலூரில் பிறந்தவராக அல்லது வாழ்ந்தவராக இருக்க வேண்டும். ஆதலால் இருடைய தந்தைப் பெயரையும் ஊர்ப்பெயரையும் சேர்த்து அழைக்கப்பட்டுள்ளார். இவர் பத்துப்பாட்டில் ஒன்பதாவது பாட்டான பட்டினப்பாலை என்ற நூலையும் எழுதியுள்ளார்.

**சங்ககால சமுதாயம்**

ஆதிகால மனிதன் வாழ்ந்த சமூகம் எவ்வாறு இருந்தது என்பதைச் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுவனவாக உள்ளன. சங்ககாலச் சமூகம் நிலத்தின் இயற்கையமைப்பிற்கு ஏற்ப குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று வகைப்படுத்தப்பட்டிருந்தது. இதன் அடிப்படையில் சங்ககால மக்கள் மலை, காடு, சமவெளிப்பகுதி, கடற்கரைப்பகுதி மற்றும் மணற்பாங்கான பகுதிகளில் வாழ்ந்துள்ளதை அறியமுடிகிறது.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற சமுக பிரிவுகளும் காணப்பட்டன. இதில் அந்தணர்கள் கோயில் வேலைகளைச் செய்தல், கல்வி கற்றுக் கொடுத்தல், வேள்வி நடத்துதல் போன்றப் பணிகளைச் செய்தனர். அரசர்கள் மக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் அதிகாரம் பெற்றவர்களாக இருந்தனர். வணிகர்கள் பொருட்களை விற்பனைச் செய்வதையே தலையாய பணியாக கொண்டிருந்தனர். இவர்கள் பிற நாட்டினருடனும் கடல்கடந்து வணிகம் செய்துள்ளனர். வேளாளர் என்பவர்கள் வேளாண்மை நிலங்களை வைத்துக் கொண்டு விவசாயம் செய்வதைத் தங்கள் கடமையாகக் கொண்டிருந்தனர். இவர்களின் கீழ். மக்களுக்கு உதவி செய்யும்விதமாகக் கொல்லர், தச்சர், குயவர், வண்ணார் போன்ற பல்வேறு கைவினைஞர்களும் இருந்துள்ளனர்.

சங்ககால மக்களின் சமுதாயத்தை அறிய வேண்டுமானால் அவர்களின் பண்பாட்டை அறிந்துகொண்டாலே போதுமானதாகும். இதில் மக்களின் உணவு முறைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உடைகள், அணிகலன்கள், உறைவிடம் போன்றன அடங்கும்.

**குடும்பம்**

சமுதாயத்தில் குடும்பமானது முக்கியத்துவம் பெற்றுத் திகழ்கின்றது. குடும்பம் என்பது தந்தை, தாய், மகன், மகள், தாத்தா, பாட்டி என்ற உறவுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. குடும்பம் என்பது (திரு) மணத்தால் கட்டப்பட்ட மாந்தர் குழுவாகும். இது இரத்தத் தொடர்புடையதாக அமைந்திருக்கும். அவர்கள் ஒரே வீட்டில் வாழ்பவர்களாக இருப்பர். ஒத்த செயலுடையவர்களாக இருப்பர். சமுதாயத்தில் கணவன்-மனைவி, தாய்-தந்தை, மகன்-மகள், உடன்பிறந்தவர் என்ற உறவுடனும், பொதுவான பண்பாட்டுடனும் வாழ்வர் *1986:.iv: 673)*. குடும்பத்தினைத் தனிக் குடும்பம், கூட்டுக்குடும்பம் என்று இரண்டாக வகைப்படுத்துவர். சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் குடும்பம் பற்றியச் செய்திகள் அதிகமாகக் காணப்படுகின்றன. சிறுபாணாற்றுப்படை பாணனின் குழந்தை, மனைவி பற்றிய குடும்பச் செய்திகளை *(139)* எடுத்துரைக்கிறது. பெரும்பாணாற்றுப்படையானது இளந்திரையன் தன்னுடைய சுற்றத்துடன் இருந்துள்ள *(41)* செய்தியைச் சுட்டுகிறது.

**உணவு**

மனிதனின் அடைப்படைத் தேவைகளுள் உணவு முதன்மையானதாகும். உலகத்து உயிர்கள் அனைத்தும் உணவின்றி உயிர் வாழ்வதில்லை. உணவு என்பது வெறும் உயிர் வாழ்வதற்கு மட்டுமின்றி அது ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுக்குட்பட்ட ஒன்றாகவும் அமைந்து விடுகிறது. ஒவ்வொரு இனக் குழுவினரும் அல்லது இனத்தவரும் தங்களுக்கென்று தனித்தனி உணவுப் பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ளனர். பண்டைத் தமிழ்கள் விருந்தினரை உபசரிப்பதில் பெரும் ஆர்வத்தினைக் காட்டி வந்தனர்

குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த எயினர், எயிற்றியர்கள் வேட்டையாடிய உடும்பு, ஆமை, மான் போன்றவற்றைச் சமைத்து உணவாக உட்கொண்டனர். இதனை,

**கொடுவில் எயினர் குறும்பிற் சேப்பின்**
**களர்வளர் ஈந்தின் காழ் கண்டன்ன**
**சுவல் விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி**
**ஞமலி தந்த மனவுச்சூழ் உடும்பின்**
**வறை கால்யாத்தது வயின்றொறும் பெறுகுவீர்.**

**(பெரும்பாணாற்றுப்படை, பா.129-233)**

**எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆய மோடு**
**ஆமான் சூட்டின அமைவரப் பெறுகுவீர்.**
**(சிறுபாணாற்றுப்படை, பா. 175-177)**

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. இதிலிருந்து குறிஞ்சி நில வேடர் குலத்தவர்கள் வேட்டையாடிய பொருட்களை முதன்மையாகக்கொண்டு உணவினை உண்டுள்ளனர் என்பது புலனாகிறது. அவர்கள் உண்ணும் உணவினையே விருந்தினருக்கும் அளித்துள்ளனர். இதிலிருந்து பழந்தமிழரின் விருந்தோம்பல் பண்பாடு புலனாகிறது.

முல்லை நில மக்களாகிய இடையர்கள் ஆடு, மாடுகளைப் பெரும் செல்வமாகக் கொண்டவர்கள். ஆயினும் இவர்களின் உணவு புன்செய் தானியங்கள் தான். இவர்கள் தினைச் சோறும், பாலும் (பெரும். 166-168) உணவாக உட்கொண்டுள்ளனர். உணவு பழக்கவழக்கமானது மக்களின் வசதியின் அடிப்படையில் காணப்படுகின்றது. பசியினையும் வறுமையினையும் அறியாத பெருங்குடி மக்கள் நெற்சோறுடன் வீட்டில் வளர்த்த பெட்டைக்கோழியினைப் பொரியல் செய்து சாப்பிட்டனர். மேலும், இவர்கள் உணவுடன் அவரைப் புழுக்கினையும் (பெரும். 195) சேர்த்து உண்டனர்

ஆண் பன்றிக்கு நெல்லை இடித்து உணவாகக் கொடுத்து, பெண் பன்றியுடன் புணராமல் தவிர்த்து அதனைப் பெரிய குழியில் தனியாகப் போட்டு வளர்த்தனர். பல நாட்கள் இவ்வாறு தனியே வளர்க்கப்பட்ட பன்றியினையே உணவாக உண்டுள்ளனர் (பெரும். 314-345). இதிலிருந்து பன்றியை அசுத்தமான உணவுகளை உண்ண விடாமல் பாதுகாத்து அதன் இறைச்சியை உண்டுள்ளமை புலனாகிறது. இதிலிருந்து பழந்தமிழர்கள் ஒவ்வொரு உணவினையும் சுவைப்பட எவ்வாறு உண்ணலாம் என்பதை அறிந்து உண்டுள்ளமை அறிந்துகொள்ள முடிகிறது.

வயல் வரப்புகளில் புதிய வைக்கோலால் வேய்ந்த குடில்களின் முற்றத்தில் அவல் இடித்துள்ளனர். அவல் இடிக்கும் ஓசையை அருகிலுள்ள கிளிகள் கேட்டுத் தமக்குப் பகையோ என அஞ்சுமாம் (பெரும். 224-227).

சங்ககாலத்து அந்தணர்கள் அறுசுவை உணவுகளை உண்டனர். பார்ப்பன மகளீர் இராசசன்னம் என்னும் நெல்லரிச் சோற்றைச் சமைத்து, அதற்குத் துணை உணவாக மாதுளங்காய்களைச் சிறு துண்டுகளாக்கி அரிந்து அதில் மிளகுத்தூளைத் தூவி கருவேப்பிலையிட்டு வெண்ணெயில் வேகவைத்துப் பொரியல் செய்து (306-308) உண்டதைப் பெரும்பாணாற்றுப்படை சான்று பகர்கின்றது. இதிலிருந்து காய்கறியாகியத் துணை உணவு தயார் செய்து உண்டுள்ளமை புலனாகிறது.

மருத நில உழவர்கள் தாங்கள் பயிர் செய்த பொருட்களையே சமைத்து உண்டனர். இதனால் அவர்கள் செல்வம் நிரம்பித் திகழ்வனவாதலின் இவற்றை மல்லன் பேரூர் (பெரும். 254) என்றனர். இவர்கள் வரகரிசி, நெல்லரிசி, சாமை போன்றவற்றைப் பயிரிட்டனர். அதையே சமைத்து வெண்சோறு (சிறுபாண்: 193-195) செய்து விருந்தினருக்கும் அளித்துள்ளனர்.

நெய்தல் நிலத்தில் வாழும் சேர்ப்பன், பரதவர்கள் (சிறுபாண் : 159) மீன்பிடித்தல் தொழிலில் திறமை மிக்கவர்கள். இதனால் அவர்கள் அதிகமாக மீன் உணவையே உட்கொண்டனர். சிறுபாணாற்றுப்படை பாடலில் நெய்தல் நில மக்கள் காய்ந்த குழல் மீனைச் சுட்டு உணவாக உண்டனர். அதையே விருந்தினருக்கும் அளித்துள்ளனர். இதனை,

**வறல் குழல் சூட்டின் வயின் வயின் பெறுகுவீர்**
***(சிறுபாணாற்றுப்படை, பா.163)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது. இதில் வறல் குழல் என்பது கருவாட்டைக் குறிப்பதாகும். பக்குவப்படுத்திய உலர்ந்த மீனைக் கருவாடு என்கின்றனர். இவர்கள் அரிசிக்கூழ், சுட்டமீன்கள் முதலியவற்றை விரும்பி உண்டனர். கூழை விரிந்த பாத்திரத்தில்விட்டு ஆற்றி உண்டனர் (பெரும். 275-282, சிறுபாண் 158-159).

### ஆடைகள்

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் ஆடையும் ஒன்று. மனிதனின் அடிப்படைத் தேவையாகவும் பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்குவது ஆடையாகும். சங்ககாலத்தில் ஆடையினைக் குறிக்க தழை, துகில், கலிங்கம், அறுவை, ஆடை, உடுக்கை, கச்சு, ஈரணி, தானை, போர்வை, காழகம், கச்சை, வம்பு, மடி, பட்டு, சிரை, படம், படாம், பூங்கரை, நீலம், உத்திரியம், கம்பலம், கவசம், தூசு, மழவை, சிதர்வை, சிதவல், வார், மெய்ப்பை, மெயிம்மறை, மெய்யாப்பு, வெளிது, புட்டகம், நூல் பக்குடுக்கை போன்ற சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர் (1980 : 16) என்று பகவதி குறிப்பிடுகிறார்.

சங்ககாலத்தில் வறுமையில் வாடியவர்கள் பயன்படுத்திய ஆடையினை சிதர்வை என்பர். வறுமையில் வாடிய பாணர்கள் சிதர்வை ஆடையினை அணிந்துள்ளனர். இதனை,

**நின்னரைப் பாசியன்ன சிதர்வை நீக்கி**
***(பெரும்பாணாற்றுப்படை பா. 468)***

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது. மேலும், கலிங்கம் (பெரும். 469), (சிறுபாண். 85), கச்சி (பெரும். 71) அறுவை (சிறுபாண். 236) போர்வை (சிறுபாண். 256) பட்டாடை (பெரும். 469-470) போன்ற பெயர்களில் ஆடைகள் குறித்த செய்திகள் பாண் ஆற்றுப்படை களில் காணப்படுகின்றன.

### அணிகலன்கள்

பண்டைத் தமிழர்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளனர். இவர்கள் தலைமுதல் பாதம் வரை பல விதமான அணிகலன்களை அணிந்துள்ளனர். தாங்கள் ஈட்டிய பொன்னையும், பொருளையும் கொண்டு அணிகளைச் செய்து அணிந்தனர். பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் அணிகலன்களை அணிந்துள்ளனர். அக்காலத்தில் பெண்கள் தங்கள் தலையில் பல்வேறு அணிகலன்களை அணிந்தனர். வாடும் மலர் மாலைகளை அணிந்தவர்கள் வாடாப் பொன்னாரி மாலைகளையும் சூடினர். இதனை,

**புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்**
**தொடையமை மாலை விறலியர் மலைய**
**(பெரும்பாணாற்றுப்படை, பா. 485-86)**

என்ற பாடலடிகள் மூலம் தெரியலாம். மேலும், கையில் அணியும் தோடி (சிறுபாண். 81), கழல் (சிறுபாண். 95), வளையல் (சிறுபாண். 136, 176, 192), காதணி (சிறுபாண். 197), போன்றனவற்றை அணிந்துள்ளனர். மேலும் தலையில் பொற்றாமரைச் சுட்டியும் (பெரும். 481-482) அணிந்திருந்தமையை அறியமுடிகிறது.

### உறைவிடம்

ஆதிகால மனிதன் இயற்கையிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வீடுகளை அமைத்துக் கொண்டான். இவை அவரவர் வசதிக்கு ஏற்பக் காணப்பட்டன. வசதியற்ற ஏழைகள் ஓலை மற்றும் புல்லால் வேயப்பட்ட குடிசைகளிலும், வசதி படைத்த செல்வந்தர்கள் மாடமாளிகைகளிலும் வாழ்ந்தனர். இது இக்கால சமுக நிகழ்வுகளைப் போன்றே காணப்பட்டுள்ளது. இவை சங்ககால மக்களின் கட்டடக் கலை மரபுக்குச் சான்று பகர்வதாகவும் அமைந்துள்ளன.

### குடிசைகள்

சிறிய ஓலை மற்றும் புல், தழைகளால் ஆன மனையினைக் குரம்பை என்று சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. இக்குடிசைகள் தேறலைப்புல், ஈந்திலை, வரக்கற்றை, தருப்பைப் புல் போன்றவற்றாலான பல்வேறுவிதமான கூரை அமைப்புகளைக் கொண்டிருந்தன.

**வரிப்புற வணிலொடு கருப்பை யாடா**
**தியாற்றல் புரையும் வெரி நுடைக் கொழுமடல்**
**வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக**
**ஈந்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை**
***(பெரும்பாணாற்றுப்படை, பா. 85-88)***

**உறு வெயிற்கு உலைஇய உருப்பு அவிர் குரம்பை**
***(சிறுபாணாற்றுப்படை, பா. 174)***

என்ற பாடலடிகள் மூலம் எயினர்கள் வாழ்ந்த வீட்டின் அழகு கூறப்பட்டுள்ளது. மேலும், ஈந்திலையினைக் கொண்டு கூரை வேயப்பட்டதையும் அறியமுடிகின்றது. தருப்பைப்புல் (பெரும். 263-65) வரகக்கற்றைப் (பெரும். 147-159) போன்றவற்றாலும் கூரைகள் வேயப்பட்ட செய்திகள் இடம் பெற்றுள்ளன.

### மாளிகைகள்

வசதிப்படைத்தவர்கள் மாட மாளிகையில் வசித்துள்ளனர். அம்மாடமாளிகைகள் உயர்ந்து விளங்கியுள்ளன. இதனை,

**மாடம் ஓங்கிய மணல் மலி மறுகிற்**
***(பெரும்பாணாற்றுப்படை, பா. 322)***

என்ற பாடலடி மூலம் ஆசிரியர் மாடி வீடுகள் வானை முட்டும் அளவிற்கு உயர்ந்திருந்தன எனச் சித்தரித்து காட்டுகிறார். மாடி வீடுகள் வானத்தோடு போர் செய்வதற்குத் தயாராக இருப்பது போன்று உயர்ந்திருந்தன (பெரும். 348). இது விண்ணைத் தொடும் அளவிற்கு சங்ககால வீடுகள் உயர்ந்து காணப்பட்டமைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

### பரண்கள்

சங்ககால மக்கள் ஆடு, மாடு, கோழி போன்ற வளர்ப்பு பிராணிகளை வளர்த்துள்ளனர். அதனைப் பாதுகாக்கும் பொருட்டு கூடுகளைச் செய்துள்ளனர். கோழிகளைப் பாதுகாக்கும் பொருட்டு பரண் அமைத்து கூரை வேய்ந்துள்ளனர். இதனை,

**ஆரை வேய்ந்த வறை வாய்ச் சடகம்**
**வேழங் காவலர் குரம்பை யேய்ப்பக்**
**கோழி கேக்குங் கூடுடைப் புதவின்**
***(பெரும்பாணாற்றுப்படை, பா. 50-52)***

என்ற பாடலடிகள் மூலம் கோழிகளுக்கும் வீடு போன்று பரண் அமைத்துள்ளமை புலனாகிறது.

### படுக்கைகள்

சங்ககால மக்கள் தங்களின் வசதிக்கு ஏற்ப வீடுகளில் பல்வேறு விதமான படுக்கைகளைப் பயன்படுத்தியுள்ளனர். வசதி படைத்தவர்கள் பஞ்சு மெத்தைகளிலும், ஏழைகள் ஓலைப்பாய், பாறை, மான், புலித்தோல்களையும் படுக்கைகளாகப் பயன்படுத்தியுள்ளனர். இதனை,

**மான்றோற் பள்ளி மகவோடு முடக்கி**
***(பெரும்பாணாற்றுப்படை, பா. 89)***

என்ற பாடலடியின் மூலம் பாலைநில மக்கள் தாங்கள் வேட்டையாடிய மான் தோலையே படுக்கையாகப் பயன்படுத்தியுள்ளமை அறியமுடிகின்றது. ஆட்டின் தோலையும் (பெரும். 149) படுக்கையாகப் பயன்படுத்தியுள்ளனர்.

### வேலி அமைப்பு

தற்கால மக்கள் வீட்டைச்சுற்றி எல்லைச் சுவர் எழுப்புவது போன்று சங்ககால மக்கள் வீட்டில் வளர்க்கும் ஆடு, மாடுகளைப் பிற விலங்குகள் அடித்துக் கொன்று விடாமல் இருக்க காட்டுமுள், மற்றும் செடி, கொடிகளைக்கொண்டு வேலிகளை அமைத்துள்ளனர்.

**வாழ்முள் வேலிச் சூழ் முளைப் படப்பை**
**(பெரும்பாணாற்றுப்படை, பா. 126)**
**இடுமுள்வேலி எருப்படு வரைப்பி**
**(பெரும்பாணாற்றுப்படை, பா. 154)**

என்ற பாடலடிகள் மூலம் அக்காலத்திலே வேலி அமைக்கும் முறை இருந்துள்ளமைப் புலனாகிறது.

### தொழில்கள்

ஆதிகால மனிதன் நாடோடியாக வாழ்ந்தான். பின்னர் அவன் நிலையாக ஓரிடத்தில் வாழ முற்பட்டபோது தொழில்கள் பலவகை கலைகளாகத் தோற்றம் பெற்றன. சங்ககாலத்தில் ஒவ்வொரு நிலத்தில் வாழ்பவர்களும் ஒவ்வொருவிதமான தொழில்களைச் செய்தனர். குறிஞ்சி நிலத்தவர்கள் வேட்டையாடுதலை முதன்மைத் தொழிலாகவும், முல்லை நிலத்தவர்கள் ஆநிரைகளை மேய்த்தலையும், மருத நிலத்தவர் விவசாயம் செய்தலையும், நெய்தல் நிலத்தவர்கள் மீன் பிடித்தலையும், பாலை நிலத்தவர்கள் வழிப்பறிக் கொள்ளையடித்தலையும் தொழிலாகக் கொண்டிருந்தனர். இத்தொழில்களின் அடிப்படையில் சமுதாய பாகுபாடுகள் தோன்றின. இதனை, இனக்குழு மக்கள் தாங்கள் செய்து வந்த தொழில்களின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்டனர். எனவே அவரவர் செய்துவந்த தொழில்களின் பெயரிலேயே அழைக்கப்பட்டனர். (2009 : 3) என்கிறார் ரெஜித்குமார்.

### உழவுத் தொழில்

சங்ககாலச் சமுதாயத்தில் உழவுத் தொழில் முக்கிய இடம் பெறுகின்றது. எல்லா தொழில்களையும் விட உழவுத் தொழில் முதன்மையானதாகும். வேளாண்மைச் செய்வதற்கு முதலில் நிலத்தை உழுகின்றனர்.

**குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்**
**நடைநவில் பெரும் பகடு புதவிற்பூட்டிப்**
**படிவா யான்ன மடிவாய் நாஞ்சி**
**உடும்புமுக முழுக்கொழு முழ்க ஊன்றித்**
**தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை**
**(பெரும்பாணாற்றுப்படை, பா. 197-201)**

என்ற பாடலடிகள் மூலம் நிலத்தைப் பண்படுத்த பலமுறை உழுதுள்ளமையை அறியமுடிகின்றது. ஒருமுறை உழுதலை ஒருசால் உழவு என்றும், இருமுறை உழுதலை இருசால் உழவு என்றும், பலமுறை உழுதலைச் செஞ்சால் உழவு என்றும் குறிப்பிடுவர். அவ்வாறே உழவின் கண் இரண்டு எருதுகளை உழவில் பூட்டி அவை ஓடாமலும் மெல்லப் போகாமலும் ஒத்து நடக்குமாறு செய்து உழுதுள்ளமை புலனாகிறது. உழுது பண்படுத்திய வயலில் நாற்றுகளை நன்கு அழுத்தி நடுவர். இதனை, முடிநா றமுத்திய நெடுநீர்ச்செறுவில் (பெரும். 212) என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகின்றது. நட்ட பயிர் நன்கு வளர்ந்த பின் அறுவடைச் செய்வர். இதனை, நன்கு விளைந்த முற்றிய செந்நெற் கதிரானது கடுக்கும் தன்மையைக் கொடுக்கும் குளவித்திரளை ஒத்துள்ளது. நெல் திரண்ட தாளை உழவர்கள் அறுத்து மருத மர நிழலிடத்தேயுள்ள பெரிய களத்தில் குவித்து வைக்கின்றனர். இவ்வாறு குவித்து வைத்த நெற்போரைப் பிரித்தடித்து (தலையடி) பின்னர் சூடடிக்கின்றனர் (போரடித்தல்) (பெரும். 229-242). தனியே பிரித்தெடுத்த தானியங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்குப் பெரிய நெற்கூடுகளைப் பயன்படுத்தியுள்ளனர் (பெரும். 243-247). இக்கூடானது ஏணி

வைத்தும் எட்டாத அளவிற்கு மிகவும் உயரமான நெற்கூடுகளாக இருந்துள்ளமை அறியமுடிகின்றது. உழவுத் தொழிலுக்குப் பயன்படுகின்ற கலப்பை, உருளை இவைகளைப் பாதுகாப்பாக வைப்பதற்குத் தனிக் கொட்டில்கள் (பெரும். 188-89) வீட்டின் பக்கத்திலேயே அமைக்கப்பட்டிருந்தமைக் குறிப்பிடத்தக்கதாகும்.

## இசைத் தொழில்

சங்ககாலத்தில் இசைத் தொழில் செய்பவர்களைப் பாணன் என்று அழைத்தனர். பாண்-யாழ், பாண் வாசிப்பவர் பாணர். பாண் வாசிக்கும் பெண் பாணினி, பாண்-இசை, பண்ணைப் பாடுவோர் பாணர் என்று கூறுவர். பழந்தமிழ் நாட்டிலே பாணர் என்று ஒரு வகுப்பினர் இருந்தனர். பாண் வாசிக்கும் தொழில் காரணமாக இவர்களைப் பாணர் என்றழைத்தனர் (2003: 58) என்று சாமி சிதம்பரனார் குறிப்பிடுகிறார். பண் இசைப்போர் பாணர் எனத் தொழில் பெயரால் அழைத்தனர் (1989 : 271) என்கிறார் சசிவல்லி. பாணர்கள் யாழ் என்ற இசைக் கருவியினைக் கொண்டு இசைத்து பாடியுள்ளனர். இவ்யாழின் தன்மை மற்றும் பாணனின் இசைத் திறமையினையும்,

***பொன் வார்ந்தன்ன புரிஅடங்கு நரம்பின்***
***இன்குரல் சிறியாழ் இடவயின் தழீஇ***
***நைவளம் பழநிய நயம் தெரிபாலை***
***கைவல் பாண்மகன் கடன் அறிந்து இயக்க***
***இயங்கா வையத்து வள்ளியோர் நசைஇ***
***(சிறுபாணாற்றுப்படை, பா. 34-38)***

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இதில் பொன்னால் செய்த நரம்பு போன்ற முறுக்கேறிய நரம்புகளையுடைய சிறிய யாழ், இனிய ஓசையையுடைய யாழ் அதை இடப்பக்கத்துத் தழுவி வைத்துள்ளான். பாடுதலில் வல்ல பாண்மகன். அவன் நைவளம் என்னும் பண்ணனையும் இனிமை தருகின்ற பாலைப் பண்ணனையும் இசைப்பதில் வல்லவன் என்று பாணனின் யாழின் தன்மையும் சிறப்பும் கூறப்பட்டுள்ளது.

## மரத்தொழில்

மரத்தினைப் பயன்படுத்தி தேவையானப் பொருட்களைச் செய்பவர்களைத் தச்சர் என்று அழைப்பர். இவர்கள் தச்சுத் தொழிலைக் குலத்தொழிலாகக் கொண்டுள்ளனர். தச்சர்கள் இளம் வயதிலேயே தொழிலைப் பழகுகின்றனர். அவ்வாறு பழகும்போது முதலில் பொம்மைத் தேர்கள் செய்து விளையாடியவர்கள், பின்னர் பெருந்தச்சர்களாகின்றனர். இதனை,

***தச்சச் சிறார் நச்சப் புனைந்த***
***ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர்***
***(பெரும்பாணாற்றுப்படை, பா. 248-249)***

என்ற பாடலடிகள் மூலம் அறியலாம். இவர்கள் தேர் (சிறுபாண் 256-258) மற்றும் சகடம் போன்றவற்றைச் செய்வதில் தேர்ச்சி பெற்றிருந்தனர். இவர்கள் செய்த சகடமானது திரண்ட வட்டையில் ஆரக்கால்கள் செருகி அமைக்கப்பட்ட சக்கரங்கள், முழுமரத்தில் கடைந்தெடுக்கப்பட்ட குடங்கள் மத்தளங்கள் போன்றுள்ளன. ஆரக்கால் குடத்திற்கும் வட்டைக்கும் இடையில் பொருத்தப்பட்டிருந்தன. அச்சு மரத்தின் மேலே நெடியவாய் இரண்டு பக்கத்து நெடுகக் கிடக்கின்ற பரு மரங்கள் இரண்டினையும் நெருங்கத் துளைத்துக் குறுக்கே ஏணி போலக் கோர்த்து அமைக்கப்பட்டுள்ளது (46-50) என்று பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

## மண்பாண்டத் தொழில்

சங்ககால மக்கள் மண்பாண்டத்தின் பயன்பாட்டை அறிந்து அதனைப் பயன்படுத்தியுள்ளனர். மண்ணைப் பக்குவப்படுத்திப் பானைகளைச் செய்பவர்களைக் குலாலன், குவலன், கன்சிவராம், கொசவன் (1987: டிடி:188) முதலிய பெயர்களில் வழங்கப்பட்டதாகத் தர்ஸ்டன் குறிப்பிடுகிறார். இவர்கள்

மக்கள் சமைப்பதற்கும் மற்றும் பல்வேறு பயன்பாட்டிற்கு ஏற்ப பல்வேறுவிதமான பானைகளைச் செய்து கொடுத்தனர். பானையினைக் குழிசி என்று கூறுவர். இதனை,

**முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி**
**(பெரும்பாணாற்றுப்படை, பா. 99)**

என்ற பாடலடி மூலம் அறியமுடிகிறது. மேலும், மாங்காய், எலுமிச்சை, நார்த்தங்காய் இவற்றால் செய்த ஊறுகாய்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு மண்ணால் செய்த மண்பாண்டங்களைப் பயன்படுத்தியுள்ளனர். இதனைக் காடி (பெரும். 57-58) என்று கூறுவர். இதில் ஊறுகாயினை வைத்தால் அதிகநாள் கெடாமல் இருக்கும் என்பதை அறிந்து அதனைப் பழந்தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

## இரும்புத் தொழில்

கொல்லர்கள் இரும்புத் தொழிலைச் செய்தனர். இவர்கள் மக்களுக்குத் தேவையானப் பொருட்களைச் செய்து கொடுக்கும் கைவினைக் கலைஞர்கள் ஆவார். சங்க இலக்கியங்கள் அவர்களைக் கருங்கைக் கொல்லன் (பெரும். 437) கருந்தொழில் வினைஞர் (சிறுபாண். 257) என்று சிறப்பித்துக் கூறுகின்றது. கொல்லர்கள் தோலினால் ஆன துருத்தியைக் காலால் மிதித்து தீயுண்டாக்கினர் (பெரும். 206-07). இரும்பினை நன்கு பழுக்கக் காய்ச்சி சம்மட்டியால் (பெரும். 430-440) அடித்து பொருட்களைச் செய்துள்ளனர். இதிலிருந்து பழந்தமிழர்கள் இரும்பின் பயன்பாட்டை அறிந்து தொழில்கருவிகளைச் செய்து பயன்படுத்தியுள்ளமை புலனாகிறது.

## உப்பு வணிகம்

உமணர்கள் உப்பு முதலிய பொருட்களை வண்டிகளில் கொண்டு சென்று வணிகம் செய்தனர். வண்டிகளில் பொருட்களை ஏற்றி ஊர் ஊராகச் சென்று விற்கும் குழுவின் செலவை ஒழுகை (சிறுபாண். 68) என்றும், அக்குழுவை வணிகச் சாத்து (பெரும். 80) என்றும் வழங்குவர், மேலும், உணவுப் பொருட்கள் மற்றும் உப்புகளை ஏற்றிச் செல்லும் ஒழுகையின் இரு மருங்கிலும் காவல்காத்துச் சென்ற உடல் வலிமையுடைய மக்களும் இருந்தனர் (பெரும். 59-62) என்ற செய்தியையும் சிறுபாணாற்றுப்படை பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

## பொருளாதார நிலை

சங்ககாலச் சமூகத்தில் வள்ளல்கள், கொடையாளிகள், செல்வந்தர்கள் என்று பலர் வாழ்ந்திருந்தாலும் தமிழ் மக்கள் பலர் உண்ணுவதற்கு உணவின்றி வறுமை நிலையில் பெரும் அவதிபட்டுள்ளனர். பாணாற்றுப் படைகள் பாணனின் வறுமை நிலையினை எடுத்துரைப்பதாகவும் அமைந்துள்ளது.

**ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்**
**வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த**
**குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர்காட்சிநாணிக்கடையடைத்து**
**இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்**
**(சிறுபாணாற்றுப்படை, பா. 135-139)**

என்ற பாடலடிகள் மூலம் பாணனின் வறுமை நிலையினை அறிய முடிகின்றது. பசித் துன்பத்தால் துன்புற்ற மெலிந்த இடையுடையாளான கிணை மகள் அவள் கையில் வளையல் அணிந்திருந்தாள். கூரிய நகத்தால் குப்பையில் முளைத்திருந்த வேளைக் கீரையை உப்பில்லாமல் வேக வைத்தாள். அதனைப் பிறர் பார்த்து விட்டால் புறம்கூறி நகைப்பார்களே என்று முன் வாயில் கதவை அடைத்து தம்முடைய குழந்தை மற்றும் சுற்றத்துடன் உண்கிறாள் என்று சுட்டிக்காட்டுகின்றது. இதில் எவ்வளவு தான் வறுமை நிலையில் இருந்தாலும் சங்ககாலப் பெண்கள் அதனைப்

பிறரிடம் காட்டிக்கொள்ளாத பண்பு நலன் கொண்டிருந்தமையை அறிய முடிகின்றது.

**கலைஞர்கள்**

சங்ககாலத்திலும் கலைஞர்களாகக் காணப்பட்ட பாணர், கூத்தர், விறலியர் போன்றவர்களுக்கு மன்னர்களும், வள்ளல்களும், பல உதவிகளைச் செய்தனர். வறுமையில் வாடிய கலைஞன் பொருள் பெற்று வரும்போது வழியில் வறுமையுடனிருக்கும் கலைஞனை அழைக்கும் போது, அவ்வறுமைக் கலைஞன் நடந்து வந்த வழியின் இயல்பினைக் கூறி அவனுக்கும் பொருள்கிடைக்க வழிசெய்து ஆற்றுப்படுத்துகிறான் (சிறுபண். 1-2) என்று கலைஞர்களின் நிலையினைச் சிறுபாண் ஆற்றுப்படை எடுத்துரைக்கிறது.

**மன்னனின் மாண்பு**

சங்ககால மன்னர்கள் தன்னை நாடிவரும் கலைஞர்களுக்குப் பரிசில்களை வழங்குவது அவர்களின் மாண்புகளாக இருந்தன. சிறுபாணாற்றுப் படையானது கடையேழு வள்ளல்களான பேகன் (84-87), பாரி (87-91), காரி (92-95), ஆய் (95-99) அதியன் (99-103), நள்ளி (103-107), ஓரி (107-111) போன்றவர்களின் கொடை சிறப்பினையும் அதற்கு அடுத்து சிறந்த கொடை வள்ளலான நல்லியக் கோடன், தன்னை நாடி வந்த கலைஞர்களைக் கண்டவுடன் காலம் தாழ்த்தாமல் அவர்களின் குறையைப் போக்கியவன் (235-240) என்று அவனின் சிறப்பினை எடுத்துரைக்கின்றது. இதிலிருந்து நல்லியக் கோடனின் மாட்சிமை புலனாகிறது.

பெரும்பாணாற்றுப் படையானது தொண்டைமான் இளந்திரையனுடைய சிறப்பையும் அவனுடைய அரசாட்சியின் மேன்மையினையும் எடுத்துரைக்கின்றது. அதர்மத்தை ஒழித்து தர்மத்தைச் செய்வதற்குத் துணை புரிகின்றவன், கூர்மையான வேற்படையை உடையவன், நீதிமுறை வேண்டியும், குறை தீர்ப்பதற்கு வேண்டியும் வருபவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்பவன். கொடுமைகள் செய்யாத நல்ல அமைச்சர்கள் - அறிஞர்கள் - நண்பர்கள் - உறவினர்கள் ஆகிய சுற்றத்தார்களைக் கொண்டவன் (443-447) என்று அவர் பெருமைகளையும் கொடை மாண்பினையும் எடுத்துரைக்கின்றது.

**பழக்கவழக்கம்**

பண்டையத் தமிழர்கள் உயர்ந்த பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்தனர். இன்றும் வீட்டில் விருந்தினர்கள் வந்தால் அவர்களுக்கு முதலில் நீர் கொடுக்கும் மரபு காணப்படுகின்றது. இதனைப் போன்று புரவலர்கள் பாணர்கள் வந்தவுடன் அவர்களின் பழைய ஆடைகளை மாற்றி வந்த சோர்வை நீக்குவதற்கு நல்ல போதை தருகின்ற கள்ளினைப் பருகக் கொடுத்துள்ளனர். இதனை,

> **காம்பு சொலித் தன்ன அறுவை உடீஇ**
> **பாம்புவெகுண் டன்ன தேறல் நல்கி**
> **(சிறுபாணாற்றுப்படை, பா. 236-237)**

என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகின்றது. மேலும், ஒவ்வொரு நிலத்து மக்களும் விருந்தினர்களுக்குத் தாங்கள் உண்ணும் உணவைக்கொண்டு இன்முகத்துடன் உபசாரித்த செய்தி பாண் ஆற்றுப்படைகள் முழுவதும் காண முடிகின்றது.

**முடிவாக**

சங்ககாலம் பொற்காலம் என்று கூறுவர். ஆனால் சங்ககாலத்திலும் மக்கள் ஏழ்மை நிலையில் வறுமையிலும் உழன்றுள்ளனர். இதனைப் பாண் ஆற்றுப்படைகள் எடுத்துரைக்கின்றன பாண் ஆற்றுப்படையின் மூலம் சங்ககாலச் சமுதாயத்தில் காணப்பட்ட விருந்தோம்பல், கொடை சிறப்பு முதலியவற்றை அறிந்துகொள்ள முடிகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**

1. இராசமாணிக்கனார், மா. 1970 பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.
2. சசிவல்லி. வி.சி. 1989. பண்டைத்தமிழர் தொழில்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். தரமணி, சென்னை.
3. சண்முகம் பிள்ளை. மு. 2004. சங்கத் தமிழர் வாழ்வியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
4. சிதம்பரனார். சாமி. 2009. எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும், அறிவுப்பதிப்பகம், சென்னை.
5. சுப்பிரமணியன். ச.வெ. 2009. சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, சிறுபாண் ஆற்றுப்படை தெளிவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
6. பகவதி. 1980. தமிழர் ஆடைகள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
7. தர்ஸ்டன், எட்கர், 1987. தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி 2, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
8. ரெஜித்குமார். 2009. த. மரபுவழித் தொழில்கள், காவ்யா பதிப்பகம், சென்னை.
9. Goets, W. (Ed). The New Encyclopaedia Britanica, Vol. IV, University of Chicago, London, 1986.